# பாசப்பறவைகள்

---

**Que.1. உரையாடலைப் பூர்த்தியாக்குங்கள்.** **[Marks :(4)]**

**நண்பன் : நண்பா, தமிழ்த் தேர்வுக்குத் தயாராகி விட்டாயா?**

**மாணவன் : ஆமாம், நீ?**

**நண்பன் : படிக்கிறேன். ஆமா...அந்த அன்னைத் தெரசா பாடம் படித்து விட்டாயா? அதைப்பற்றிக் கூறுவாயா?**

**மாணவன் : அன்னையின் இயற்பெயர் (அ)............................................**

**நண்பன் : கல்கத்தாவில் என்ன செய்தார்?**

**மாணவன் : (ஆ)..........................................................................**

**நண்பன் : ஆசிரியர் பயிற்சி மட்டுமா?**

**மாணவன் : இல்லை. (இ)..................................................................**

**நண்பன் : சரி, இவருக்கு விருதுகள் ஏதும் கிடைக்கவில்லையா?**

**மாணவன் : (ஈ)..........................................................................**

**Ans.** அ) ஆக்னஸ் கான்ஸ்கா. ஐரோப்பாவில் அல்போனிய நாட்டில் ஸ்காப்சி ஊரில் 1910 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 அன்று பிறந்தார். கன்னியராகச் சேர்ந்து பயிற்சி பெற்று கொல்கத்தா வந்தார்.

ஆ) அங்கு கொடுமையான பஞ்சம், பசி, நோயால் வாடிய தெருவோரக் குழந்தைகள், குடிசை வாசிகள், நோயாளிகள் இவர்கள் மேல் பரிவு கொண்டு அவர்களை ஆதரித்தார். அறக்கட்டளை – ஏழைகளுக்குக் கல்வி – அனாதைகளுக்கு ஆதரவு….

இ) இல்லை. ஆசிரியர் பயிற்சியோடு கிறிஸ்தவ மதக்கல்வி கற்றார். ஆசிரியராகப் பணியாற்றும்போது செவிலியர் பயிற்சியும் கற்றார்.

ஈ) கிடைத்தது. போப் ஜான் அமைதிப் பரிசு, நோபல் பரிசு, பாரத ரத்னா விருது.

**Que.2. ஜுன் 14, இரத்ததான தினத்தன்று பிற்பகல் 2 மணியளவில் உங்கள் பள்ளியில் வைத்து இரத்ததான முகாம் நடைபெற்றது. பள்ளிக்கருகில் உள்ள பிரபல மருத்துவமனையின் மருத்துவர் இம்முகாமை ஆரம்பித்து முதலாவதாக இரத்ததானம் செய்தார். ஏராளமான மாணவர்களும் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர். – இப்பகுதியைப் பத்திரிகைச் செய்தியாக மாற்றி எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு

கருத்துக்கோர்வை

**Que.3. பின்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.**

**கருணை, அமுதம், மாந்தர், உதிரம், இடர், விழி.**

**Ans.** அமுதம் - சாகாவரம் தரும் உணவு

இடம் - துன்பம்

உதிரம் - இரத்தம்

கருணை - இரக்கம்

மாந்தர் - மனிதர்

விழி – கண்

**Que.4. "இடர் வரும் போதும் – உள்ளம்**

**இரங்கிடும் போதும்**

**உடன்பி றந்தவர்போல் – மாந்தர்**

**உறவு கொள்வர் அப்பா!"**

**இப்பாடல் வரிகளை இன்றைய வாழ்க்கைச் சூழலோடு பொருத்தி குறிப்பு எழுதுங்கள். (குறிப்பு: பிறருக்குத் துன்பம் வரும்போது உதவும் தன்மை)**

**Ans.** பாடலின் கருத்து

உதாணங்களோடு பொருத்துதல்

**Que.5. பிறப்பினால் எவர்க்கும்**

**பெருமை வாராதப்பா!**

**சிறப்பு வேண்டுமெனில் – நல்ல**

**செய்கை வேண்டுமப்பா!**

**நம்மைச் சிறப்படையச் செய்பவை நல்ல செய்கைளே. நாம் சிறப்புபெற பின்பற்றவேண்டிய நல்லொழுக்கங்கள் சிலவற்றை வரிசைப்படுத்துங்கள்.**

**Ans.** நல்லொழுக்கங்களில் கருத்துக்கள்

**Que.6. சென்னையைச் சேர்ந்த ஐசா ஜாஸ்மின் என்னும் முருத்துவர் சென்னை பெசன்ட் நகரில் ஆதரவற்றோர் மற்றும் ஏழைகள் பசியாற உணவுப் பெட்டகத்தை அமைத்துள்ளார். இவர் குடியரசு தினத்தன்று உங்கள் பள்ளியில் நடைபெற் உள்ள விழாவில் பங்கேற்க வருகை தர**

**உள்ளார். இவரது பொதுநலச் சேவையைப் பாராட்டி உரை ஒன்று எழுதுங்கள்.**

**Ans.** உரை அமைப்பு

மருத்துவரின் செயல்களைப் பற்றிய அறிவு

மொழிநடை

**Que.7. பின்வரும் பகுதியை வாசித்துக் கீழே தரப்பட்டள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

**போப் ஜான் அமைதிப்பரிசு 1971-ஆம் ஆண்டு அன்னைத் தெரசாவுக்கு வழங்கப்பட்டது. பரிசுத்தொகையான 21,500 டாலரைத் தொழுநோய் இல்லத்திற்கு வழங்கிவிட்டார். அன்னையின் தொண்டு கடல் கடந்தும் பரவியது. உலகின் மிகச்சிறந்த பரிசான நோபல் பரிசு 1979-ஆம் ஆண்டு அன்னைத் தெரசாவுக்குக் கொடுக்கப்பட்டது.**

**அ) அன்னைக்குக் கிடைத்த பரிசுகளை எடுத்தெழுதுங்கள்.**

**ஆ) பரிசுத்தொகையை அன்னை என்ன செய்தார்?**

**இ) அன்னைத் தெரசாவுக்கு உயரிய பரிசுகள் கிடைக்கக் காரணங்களைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** அ) போப் ஜான் அமைதிப் பரிசு, நோபல் பரிசு

ஆ) தொழுநோய் இல்லத்திற்கு வழங்கினார்

இ) அன்னைத் தெரசாவின் தொண்டுகள்…

**Que.8. பள்ளிக்கூட ஆரோக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறுகின்ற இரத்ததான முகாமின் தொடக்க விழாவில் உரையாற்ற ‘இரத்த தானம், உயிர்தானம்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு தயாரியுங்கள். (குறிப்பு: இரத்ததானம் செய்யும் மனப்பான்மை – இரத்ததானத்தைப் பற்றிய அறிவு – இரத்தம் பிறருக்கு மறுவாழ்வு அளிக்கும் நிலை – இர்ததானத்தால் பாதிப்பு இல்லை என்ற விழிப்புணர்வு)**

**Ans.** அமைப்பு

கருத்து விளக்கம்

மேற்கோள் பயன்பாடு

மொழிநடை

**Que.9. பிறர் உங்களுக்கு எதைச் செய்தால் அது**

**உங்களுக்குப் பிடிக்காதோ எதைச் சொன்னால்**

**நீங்கள் மனம் வருந்துவீர்களோ, அவற்றை**

**மற்றவர்க்கு நீங்களும் செய்யாதீர்கள்."**

**இப்பொன்மொழியை இக்காலச் சூழலோடு ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பொன்மொழி உணர்த்தும் கருத்து

சமூகச் சூழல்

ஒப்பிட்டு முடிவு சொல்லல்

**Que.10. அடிக்கோடிட்ட சொற்களின் பொருளை எழுதுங்கள்.**

**அ) திண்ணன் பகழியால் கண்ணெடுத்து சிவனுக்கு அப்பினான்.**

**ஆ) சிவபெருமான் நுதலில் கண் உடையவன்.**

**இ) வானவர் பூ மாரி பொழிந்தனர்.**

**ஈ) இறைவன் கண்ணின் ஊறு கண்டஞ்சினான் திண்ணன்**

**Ans.** அ) அம்பு ஆ) நெற்றி இ) மழை ஈ) துன்பம்/தீங்கு.

**Que.11. பிழை திருத்தி எழுதுங்கள்.**

**உருப்பு தானம் மனித உயிர்களைக் காப்பது மட்டுமில்லாமல் மதம் கடந்த மனித நேயத்தையும் விதைக்கிரது. மன்னுக்குள் மக்கிப்போகும் மனித உடல் உருப்புகளை எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் தாணமாக வளங்கிட முன்வற வேண்டும்**

**Ans.** உறுப்பு, விதைக்கிறது, மண்ணுக்குள், தானமாக வழங்கிட, முன்வர.

**Que.12. தூய தமிழ்நடையில் எழுதுங்கள்.**

**"விஜி நான் நல்லா யோசிச்சிட்டேன். நான் செஞ்ச தப்ப என் அப்பாகிட்ட சொல்லி மறைச்சுட விரும்பலை. என்னால பாதிக்கப்பட்ட அந்த குடுத்பத்துல இருக்கிறவங்ககிட்ட சொல்லி மன்னிப்புக் கேட்கப்போறேன்"**

**Ans.** சரியான தமிழ் நடை

**Que.13. அடைப்புக்குள்ளிருந்து விடைகளைத் தேர்ந்து எழுதுங்கள்.**

**(கண், கல்லீரல், இரத்தம், சிறுநீரகம்.)**

**Ans.** இரத்தம்

கண்

**Que.14. ஒரு மனிதரின் உடலிலிருந்து இன்னொருவருக்குப் பொருத்திப் பயன்படுத்த இயலுகின்ற உறுப்புகளை வரிசைப்படுத்துங்கள்.**

**Ans.** கண்கள், கல்லீரல், இருதயம், சிறுநீரகங்கள்.

**Que.15. உறுப்புத்தானம் மனித உயிர்களைக் காப்பது மட்டுமல்லாமல் மதம் கடந்த மனிதநேயத்தையும் விதைக்கிறது. உடலுறுப்பு தானத்தின் உன்னதத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் துண்டுப் பிரசுரம் தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம்

உடலுறுப்புத் தானத்தின் தேவை, மனிதநேய உணர்வு

**Que.16. உலக அளவில் இரத்ததான சேவை செய்வோருக்கான இணையதளம்.**

**அ) எப்.1 எஸ் ஆ) எப்.2 எஸ்**

**இ) எப்.3 எஸ் ஈ) எப்.4 எஸ்**

**Ans.** ஆ) எப்.2 எஸ்

**Que.17. "மண்ணுக்குள் புதைத்தும் எரித்தும் வீணாகும் உன்னத உடல் உறுப்புகளை உயிர்காக்கும் மாற்று உறுப்புகளுக்காக சாவின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சக மனிதர்களுக்குக் கொடையாக அளிப்பதே உலகின் உன்னத அறம்" – இவ்வரிகளினல் வெளிப்படும் மனித நேயத்தைக் குறித்து விளக்கி எழுதுங்கள்.**

**Ans.** உறுப்புத் தானம் பெற இயலுகின்ற உறுப்புகள்

இன்றைய சமூக நிலை

உறுப்புத் தானத்தின் தேவை

**Que.18. உடல் உறுப்புக்களைத் தானமாகக் கொடுத்த ஹிதேந்திரனின் மருத்துவரான பெற்றோரிடம் உடலுறுப்பு தானத்தின் அவசியம் குறித்துக் கேட்டறிவதற்கான வினா நிரல் தயாரியுங்கள். (ஆறு வினாக்கள்)**

**Ans.** பொருத்தமான வினாக்கள்

**Que.19. விபத்தில் மூளைச்சாவு அடைந்த மாணவன் ஹிதேந்திரன். இவரது உடலுறுப்புகளைத் தானம் செய்ய மருத்துவர்களாகிய இவரது பெற்றோர் முன்வந்தனர், அம்மாணவனின் அனைத்து உறுப்புகளையும் தானமாகக் கொடுத்தனர். இம்மருத்துவர்களின் உயரிய செயலைப் பாராட்டி நன்றி கூறும் வகையில் கடிதம் எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு

கருத்து விளக்கம்

(உறுப்புத்தானத்தின் பயன்கள், பெற்றோரின் அரிய செயல்)

மொழிநடை

**Que.20. "சாரி சியாமளா.......நான் எவ்வளவோ ட்ரை பண்ணேன். பட் இப்படி ஆயிடுச்சு" – இவ்வாக்கியத்திலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.**

**Ans.** ட்ரை - முயற்சி

பட் - ஆனால்

**Que.21. உங்கள் பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பில அகில உலக கண்தான தினமாகிய ஜூன் 10-ஆம் தேதி பிற்பகல் 2 மணியளவில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற உள்ளது. பிரபல மருத்துவமனை வழியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சிக்கான ஒலிப்பெருக்கி அறிவிப்புத் தயாரியுங்கள்.**

**Ans.** உரைமுறை

தகவல்கள் அனைத்தையும் கூறும் விதம்

**Que.22. 'விபத்து' கதையில் சியாமளா என்ற கதாப்பாத்திரத்தின் பண்பு நலன்களை ஆய்வு செய்து சிறு கட்டுரையாக எழுதுங்கள். (குறிப்பு: சியாமளாவின் பண்பு – எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்து – மன்னிப்பு கேட்கும் மனம் – மனம் வருந்தும்நிலை – கதாப்பாத்திரம் தரும் செய்தி.)**

**Ans.** குறிப்புகளின் அடிப்படையில் கருத்து விளக்கம்

மாணவனின் கருத்து

மொழிநடை

**Que.23. "மன்னிப்புக் கேட்பவன் மனிதன்**

**மன்னிப்புக் கொடுப்பவன் மகாமனிதன்" என்பார்கள்.**

**'விபத்து' கதையில் சியாமளாவுக்கு மன்னிப்புக் கொடுத்த அந்தப் பெண்மணியின் மனநிலை, உங்களில் ஏற்படுத்திய மன உணர்வுகளை விளக்கிக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** பெண்மணியின் மனநிலை

மாணவனின் மன உணர்வு

மாவண் கூறும் கருத்து

பெண்மணி கற்பிக்கும் பாடம்

**Que.24. விஜி நான் நல்லா யோசிச்சிட்டேன். நான் செஞ்ச தப்ப என் அப்பாகிட்ட சொல்லி மறைச்சுட விடும்பலை. என்னால பாதிக்கப்பட்ட**

**அந்த குடும்பத்துல இருக்கிறவங்ககிட்டச் சொல்லி மன்னிப்புக் கேட்கப்போறேன்”**

**அ) இவ்வாறு மன்னிப்புக் கேட்க விரும்பும் நபரின் பெயரை எழுதுங்கள்**

**ஆ) இவரது இந்த நற்குணத்தைப் பற்றி நீங்கள் கருதுவனவற்றைத் தொகுத்துச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அ) சியாமளா

ஆ) மன்னிப்புக் கேட்கும் குணம், மனிதநேயப் பண்பு

**Que.25. ‘விபத்து’ என்ற கதையின் முடிவினை இன்றைய சமூகச் சூழலோடு ஒப்பிட்டு விமர்சனம் செய்து குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கதை முடிவு

சமூகச் சூழல்

ஒப்பீடு

மாணவர் கருத்து

**Que.26. மனிதநேயப் பண்பாளர் முத்துலட்சமி ரெட்டியின் மகன் கிருஷ்ணமூர்த்தி. மருத்துவரான இவர் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிர்வகித்து வருகிறார். அவரது பொதுநலப் பணிகளை அறிந்துகொள் விரும்பும் நீங்கள் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் நேர்காணல் நடத்த வினா நிரல் தயாரியுங்கள் (ஆறு வினாக்கள்)**

**Ans.** சரியான வினாக்கள்

**Que.27. முத்துலட்சுமி ரெட்டி புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் என்ற இடத்தில் 1886-இல் நாராயணசாமி, சந்திரம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவர் பெண் மருவத்துவர், சமூகப் போராளி; தமிழார்வலர். 1914-ஆம் ஆண்டு டி.சுந்தரரெட்டி என்பவரை மணந்தார். ஸ்திரீ தர்மம் என்னும் இதழின் ஆசிரியரும் ஆவார். மத்திய அரசின் பத்ம பூஷன் விருதினைப் பெற்றார். புற்றுநோரும் அதைத் தடுக்கும் முறையும், குழந்தைகளின் பாதுகாப்பு, என் சட்டமன்ற அனுபவங்கள், சிறு வயது திருமணத்தின் கேடுகள், இந்தியாவில் சிசு மரணம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். 1968 ஜூலை 22-ஆம் நாள் மறைந்தார்.தன் விவரப்பட்டியல் தயார் செய்யுங்கள் .**

**Ans.** வரிசைமுறை

சுருக்கமும் தெளிவும்

**Que.28. ந்தப் பெண் விஜியிடம் வந்து, “என் கணவர் உடல் தானம் செய்தவர். அவரின் உடலில் எந்த உறுப்புக்களை எடுத்துக்கொள்ள முடியுமோ**

**எடுத்துக் கொள்ளுங்கள். மேலும், அவரது உடலை மருத்துவப் படிப்புக்கான ஆய்விற்குப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டாள்"**

**அ) இவ்வாறு கூறிய 'அந்தப் பெண்' யார்?**

**ஆ) இந்தக் கூற்றின் வழியாக அந்தப் பெண் சமூகத்திற்க உணர்த்தும் செய்தியைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** விபத்தில் இறந்த நபரின மனைவி -

ஆ) அழியும் உடல் உறுப்புக்களை மீண்டும் பயன்படுத்துதல் – பலர் வாழ்வு பெறுதல் – உறுப்புத்தானத்தின் மகத்துவம்

**Que.29. தன்விவரப் பட்டியலின் அடிப்படையில் அன்னைத் தெரசாவின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுங்கள்.**

**இயற்பெயர் : ஆக்னஸ் கான்ஸ்கா**

**பிறப்பு : அல்பேனிய நாட்டில் ஸ்காப்சி ஊரில் 1910 ஆகஸ்ட் 27.**

**கல்வி : கிறிஸ்தவ மதக்கல்வி, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி.**

**பணிகள் : ஆதரவற்றோர் மற்றும் நோயாளிகளுக்கு ஆதரவு,**

**ஏழைகளுக்குக் கல்வி, திக்கற்ற குழந்தைகள் காப்பகம்,**

**இரப்போர் நல இல்லம், முதியோர் காப்பகம்,**

**தொழுநோயர் இல்லம் அமைத்தார்.**

**விருதுகள் : 1971 –இல் போப்ஜான் அமைதிப் பரிசு, 1979-இல் நோபல் பரிசு,**

**1980-இல் பாரத ரத்னா விருது.**

**சிறப்பு : அன்னையின் உருவப்பட அஞ்சல் தலை.**

**மறைவு : 1997-செப்.5, கொல்கத்தா.**

**Ans.** சரியான வாக்கிய முறை

தகவல்களின் வரிசமுறை

**Que.30. ஆதரவற்றோர், ஏழைகள் பசியாற உணவளிக்கும் 'பெட்டகம்' சென்னை பெசன்ட் நகரில் அமைக்கப்பட்டது.**

**இந்தப் பத்திரிகைச் செய்தித் தலைப்பில் வெளிப்படும் மனித நேய உணர்வைச் சிறு குறிப்பாக வெளியிடுங்கள்.**

**Ans.** உணவின் தேவை

சமூகத்தின் நிலை

இச்செயலின் சிறப்பு

**Que.31. சரியான விடைகளைத் தேர்வு செய்யுங்கள்.**

**i) தெரசா தொடக்கக் கல்வியை அரசுப் பள்ளியில் கற்றார்.**

**ii) டார்ஜிலிங்கில் 2 ஆண்டுகள் கிறிஸ்தவ மதக் கல்வி கற்றார்.**

**iii) செயின் பேமிலி மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பெற்றார்.**

**iv) உலகின் மகிச் சிறந்த விருதான பாரத ரத்னா விருது அன்னைக்கு வழங்கப்பட்டது.**

**அ) கூற்று (i), (ii) சரி ஆ) கூற்று (ii), (iii) சரி**

**இ) கூற்று (iii), (iv) தவறு ஈ)கூற்று (i), (iv) தவறு**

**Ans.** (ஆ), (ஈ)

**Que.32. சரியான முறையில் வரிசைப்படுத்துங்கள்.**

**அ) 1929-ஆம் ஆண்டு கொல்கத்தா நகரத்திற்கு வந்தார்.**

**ஆ) 'மிஷனரில் ஆப் சாரிட்டி' என்ற இயக்கம் தொட்ங்கினார்.**

**இ) தொட்கக் கல்வியைச் ரேக்ரட் ஹார்ட் ஆரம்பப்பள்ளியில் கற்றார்.**

**ஈ) தனது பெயரைச் சகோதரி தெரசா என மாற்றினார்.**

**Ans.** இ), (அ), (ஈ), (ஆ)

**Que.33. இந்தியாவின் மிக உயரிய விருதான ...............விருது அன்னைத் தெரசாவுக்கு வழங்கப்பட்டது.**

**அ) பத்மபூஷன் ஆ) பத்மவிபூஷன் இ) பாரத ரத்னா ஈ) நல்லாசிரியர்**

**Ans.** இ) பாரத ரத்னா

**Que.34. உலகின் மகிச் சிறந்த பரிசான நோபல் பரிசு 1979-ஆம் ஆண்டு அன்னைத் தெரசாவுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய உயரிய விருதினை அன்னை பெறுவதற்கான காரணங்களைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** அன்னையின் சமூக நலத் தொண்டுகள்

**Que.35. அன்னைத் தெரசா ஆரம்பித்த அறக்கட்டளையின் பெயர்**

**அ)மிஷனரிஸ் ஆப் பாவர்ட்டி**

**ஆ) மிஷனரிஸ் ஆப் பியூட்டி**

**இ) மிஷனரிஸ் ஆப் சாரிட்டி**

**ஈ) மிஷனரிஸ் ஆப் லபர்ட்டி.**

**Ans.** இ)மிஷனரிஸ் ஆப் சாரிட்டி

**Que.36. நமது நாட்டில் இதயம், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகள் பழுதுபட்டு அவற்றை மாற்றிக்கொள்ள வழியின்றி ஆண்டுக்கு 5 லட்சம் பேர் இறக்கிறார்கள்.**

**இப்பத்திரிகைச் செய்தியின் அடிப்படையில் "உறுப்புதானத்தின் மகத்துவம்" என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்**

**Ans.** நமது நாட்டில் இதயம், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகள் பழுதுபட்டு அவற்றை மாற்றிக்கொள்ள வழியின்றி ஆண்டுக்கு 5 லட்சம் பேர் இறக்கிறார்கள்.

அமைப்பு

உறுப்புதானம் எப்போது செய்வது

அதன் பயன்கள்

தேவை

எந்தெந்த உறுப்புகள்

**Que.37. நாட்டில் பஞ்சம், பசி மாற நீங்கள் கூறும் பரிந்துரைகளைப் பட்டியலிடுங்கள்.**

**Ans.** பொருத்தமான பரிந்துரைகள்

**Que.38. பஞ்சம் பசியாலும் நோயாலும் வாடிக்கிடக்கும் தெருவோரக் குழந்தைகள், தொற்று நோயால் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகள் இவற்றையெல்லாம் கண்ணுற்ற ஆக்னஸ் வேதனையடைந்தார்.'**

**அ) இவ்வாறு வேதனையுற்ற 'ஆக்னஸ்' என்பவர் யார்?**

**ஆ) இத்தகைய மக்களைக் காணும்போது உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களைச் சிறு குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அ) அன்னை தெரசா

ஆ) மாணவர்களின் மனித நெய உணர்வு

**Que.39. அன்னைத் தெரசாவின் அற்பணிப்புகள் குறித்துக் கற்றுணர்ந்த நீங்கள் 'அன்னையின் மனித நேயம்' என்ற தலைப்பில் விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** அன்னையின் பொதுநலத் தொண்டு குறித்த விளக்கம்

மொழிநடை

**Que.40. உறுப்புதானம் மற்றும் இரத்ததானம் பல மனிதர்களுக்கு உயிர் கொடுப்பதாய் மாறுகிறது. இச்செய்தியை மையமாகக் கொண்டு பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.**

**Ans.** உறுப்புதானம் மற்றும் இரத்ததானத்தின் தேவை

பகுப்பாய்வு

தீர்வு

**Que.41. ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திர தினத்தன்று காலை 10 மணிக்கு உங்கள் பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பில் இரத்ததான முகாம் நடைபெற உள்ளது. இதற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.**

**Ans.** அமைப்பு

தகவல்கள்

**Que.42. அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொற்களை எடுத்து நிரப்புங்கள்.**

**(கறுப்பே, சிவப்பே, உவர்ப்பே, துவர்ப்பே)**

**எவர் உடம்பினிலும் - ..................**

**இரந்த நிறமப்பா**

**எவர் விழி நீர்க்கும் - .....................**

**இயற்கைக் குணமப்பா**

**Ans.** சிவப்பே

உவர்ப்பே

**Que.43. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினை எடுத்து எழுதுங்கள். சுமை பேதம் என்ற கதையில்**

**அ) செல்லப்பன் கார் ஓட்ட ஆரம்பித்தான்.**

**ஆ) செல்லப்பன் ரிக் ஷா வலிக்க ஆரம்பித்தான்**

**இ) மருதையா செல்லப்பனை மதுரைக்கு அனுப்பி வைத்தான்.**

**Ans.** ஆ) செல்லப்பன் ரிக் ஷா வலிக்க ஆரம்பித்தான்

**Que.44. நூலடைவு செய்யுங்கள்.**

**முனைவர் சு.இராசேந்திரன் எழுதிய ‘எண்ணங்களும் ஏக்கங்களும்’ என்னும் கவிதை நூலின் விலை 150ரூ. 240 பக்கங்களைக் கொண்ட இந்நூலை 2012 ஆம் ஆண்டு சென்னை, சேகர் பதிப்பகத்தார் பதிப்பித்து வெளியிட்டனர்.**

**Ans.** சரியான வரிசை முறை

வடிவம்

**Que.45. “நன்மை செய்பவரே – உலகம்**

**நாடும் மேற்குலத்தார்**

**தின்மை செய்பவரே – அண்டித்**

**தீண்ட ஒண்ணாதார்”**

**இப்பாடலின் பொருளை இன்றைய சமூகச் சூழலோடு ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பாடலின் கருத்து

சமூகத்தைப் பற்றி செய்தி

ஒப்பீடு

**Que.46. ஏற்றபடி இணைத்தெழுதுங்கள்.**

**அ) மருதையா - ஏழைச் சிறுவன்**

**ஆ) புத்தர் - ஆக்னஸ் கான்ஸ்கா**

**இ) விஜி - பூங்காவனம்**

**ஈ) அன்னை தெரசா – சியாமளா**

**Ans.** அ) பூங்காவனம்

ஆ) ஏழைச் சிறுவன்

இ) சியாமளா

ஈ) ஆக்னஸ் கான்ஸ்கா

**Que.47. “எவர் உடம்பினிலும் – சிவப்பே**

**இரத்த நிறமப்பா!**

**எவர் வழி நீர்க்கும் – உவர்ப்பே**

**இயற்கை குணமப்பா!**

**பிறப்பினால் எவர்க்கும் – உலகில்**

**பெருமை வாராதப்பா!**

**சிறப்பு வேண்டுமெனில் – நல்ல**

**செய்கை வேண்டுமப்பா!”**

**இப்பாடலின் மையக் கருத்தை எழுதி நயம் பாராட்டுங்கள்.**

**Ans.** அமைப்பு

மையக்கருத்து

சொல் நயம்

பொருள் நயம்

**Que.48. ஆகஸ்ட் 15-ஆம் தேதி பள்ளியில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் உரையாற்ற ‘மனித நேயம் வளர்ப்போம்; மானிடத்தைக் காப்போம்’ என்ற தலைப்பில் சொற்பொழிவு தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம்

கருத்து விளக்கம்

மேற்கோள் பயன்

**Que.49. “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**

**வாடினேன் பசியினால் இளைத்தே**

**வீடுதோறு இரந்தும் பசியறா தயர்ந்தே**

**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்”**

**- இராமலிங்க வள்ளலார்.**

**அ) யாரைக் கண்டபோது வாடியதாக இராலிங்கர் குறிப்பிடுகிறார்?**

**ஆ) இப்பாடல் வரிகளில் வெளிப்படும் மனிதநேய உணர்வைச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அ) வாடிய பயிரை

ஆ) கருத்து விளக்கம்

**Que.50. சுமை பேதம்’ என்ற கதையில் ‘மருதையா’ கதாப்பாத்திரத்தின் பாத்திரப்படைப்பை விமர்சனம் செய்து எழுதுங்கள்.**

**Ans.** மருதையா கதாப்பாத்திரம் பற்றிய அறிவு

இக்காலச் சூழலோடு ஒப்பிடும் விதம்

**Que.51. “இவரு கலெக்டரு பேரன்……கவுனரு உத்தியோகந்தான் பாப்பாரு”**

**- அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை எழுதுங்கள்.**

**Ans.** ஆட்சியாளர்

ஆளுநர்

**Que.52. தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.**

**“தோ பாருடா மச்சான்…. இந்தக் காலத்திலே எந்த வேலையும் செஞ்சுப் பொழைக்கலாம்…அதுலே என்னாக் கேவலம்! வேணும்னா சொல்லு; நம்ம நாயுடு வூட்ல இன்னும் ரெண்டு வண்டி புதசா வருது…. ஒனக்கு ஒண்ணு வாடிகைக்குப் புடிச்சித்தர்றேன்.”**

**Ans.** தூய்மையான தமிழ் நடை

**Que.53. ஏ , மாமா…போயும் போயும் பட்டணத்துக்கு ரிக்ஷா வலிக்கவா வந்தே”?**

**அ) இவ்வினா யார் யாரிடம் கேட்டது?**

**ஆ) இக்கேள்வியில் வெளிப்படும் சமுதாயக் கண்ணோட்டத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அ) செல்லப்பன் மருதையாவிடம்

ஆ) சில தொழில்களைப் பற்றித் தவறான எண்ணம், எல்லாத்தொழில்களும் சிறந்ததே என்ற முடிவு. -